aanmeegamalar.com

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

# அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன்

## பங்குனி பெருந்திருவிழா

**சிறப்பு மலர்**

aanmeegamalar.com





## அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன்

**பங்குனி பெருந்திருவிழாவை**
**காணவரும் பக்தர்களை**
**அன்புடன் வரவேற்கிறோம்.**

இறை பணியில்

**பிராந்தமங்கலம் தி.வெள்ளைச்சாமி**
**தேவர் குடும்பத்தார்கள்**



**V.போஸ்**
B.Com., D.Coop.,
SDCC BANK
சிவகங்கை

# ஏழுநிலை ராஜ கோபுரத்துடன் காட்சிதரும் தாயமங்கலம் முத்துமாரி அம்மன்







தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான் குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலை விலும், காளை யார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலை விலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலை விலும் உள்ளது தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப் பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.இத் திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது. இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங்கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அற நிலை யத் துறையின் கட்டுப்பாட்டில் இத்திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட் டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், ‘தாய்மங்கலம்’ என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக் கிறாள், ஸ்ரீமுத்து மாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி, பல ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதியைச் சேர்ந்த வணிகர்கள் தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். இந்த கிராமத்தைச் சேர்ந்த முத்துச் செட்டியார், இவர் மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர். மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும்போதெல்லாம் மீனாட்சியையும், சொக்கநாதரையும் தவறாமல் வழிபட்டு வருபவர், அப்படி ஒரு நாள் மீனாட்சியம்மனிடம், தனக்கு குழந்தை இல்லாததை எண்ணி மனமுருகி வேண்டி மதுரையில் இருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரிய வில்லை என்றும் கூறி தேம்பினாள்.

''கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக் கொள்கின்றேன்" எனக் கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத் துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக்குழந்தையை தனக்குத் தந்ததாக எண்ணினார்.ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்க வில்லை.

செல்லும் வழியில் அங்குள்ள குளத்தின் அருகில். பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு குளத்தில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போன முத்துச் செட்டியார் தன் மனைவி யிடம் நடந்ததையெல்லாம் கூறிவருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப் போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமையிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான்உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்துஎழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலை யாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடை வில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக் கப்பட்ட வர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற் றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும் என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த்தனை நிறைவேறி நேர்த்திக்கடன் செலுத்து பவர்களையும் இங்கு காணலாம். மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தையை சுமந்து வருதல், கண்மலர் காணிக்கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால்காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். விழா காலங்களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்னதானம் நடைபெறுகிறது. கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக்கின்றனர்.

கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங்கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

தற்போது இத்தலத்தில் திருப்பணி வேலைகள் முடிவடைந்து கடந்த 2025 ஆகஸ்ட் மாதம் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. ஆண்டுதோறும் பங்குனி பெருந்திருவிழா 10 நாட்களும், நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.


## தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்

திருவிழா காண வரும்
பக்த கோடி பெருமக்களே
வருக! வருக!!
தாயமங்கலம்
ஸ்ரீ முத்துமாரியம்மன்
அருள் பெறுக!





### பங்குனி பெருந்திருவிழா

| | |
|---|---|
| 29.03.2026 ஞாயிற்றுக் கிழமை | காலை நவசகிதி ஹோமம், மாலை லட்சார்ச்சனை, கொடியேற்றம் இரவு காப்பு கட்டுதல் |
| 30.03.2026 திங்கள்கிழமை | காலை லட்சார்ச்சனை |
| 5.4.2026 ஞாயிற்றுக்கிழமை | பொங்கல் வைபவம் |
| 6.4.2025 திங்கள்கிழமை | மாலை மின்சார தீபத்துடன் தீப அலங்காரத்துடன் ரதம் |
| 7.4.2025 செவ்வாய்க்கிழமை | காலை பால்குடம் இரவு புஷ்ப பல்லாக்கு |
| 8.4.2025 புதன்கிழமை | திருக்கோவில் தீர்த்தவாரி |

என்றும் இறைபணியில்
V.ரஞ்சித்குமார், V. அஜித்குமார்
தாயமங்கலம்

SML Graphics, Chennai 9444228203





ஸ்ரீ அழகிய வரத அய்யனார் துணை

MJ

100% HUID SHOWROOM

# முருகன் ஜுவல்லரி

04564-299195
98650 84964
96296 40932



●தங்கம் ●வெள்ளி ●வைரம்

916 தங்க நகைகள், 92.5 வெள்ளி நகைகள்
வெள்ளி கொலுசுகள் வாங்க கைராசியான ஸ்தாபனம்

154-காமராஜர் சாலை, சாலையூர், இளையான்குடி

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

படியுங்கள்... aanmeegamalar.com இதுவரை வெளிவந்த 185 e-book கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்


# குழந்தையாக அன்னை மீனாட்சி காட்சி கொடுத்த தாயமங்கலம் கோவில்

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை அருகே உள்ளது தாயமங்கலம் கிராமம் இக் கிராமத்தை சேர்ந்த வணிகர் தீவிர அன்னை மீனாட்சி அம்மன் பக்தர் ஆவார் தினமும் மதுரைக்கு சென்று வியாபாரம் முடிந்து

அன்னை மீனாட்சியை மன தார கண்குளிர தரிசனம் செய்து மீண்டும் தாயமங்கலம் திரும்புவார். அன்று திரும்பும் போது தெய்வ அம்சத்துடன்கூடிய

அழகிய பெண் குழந்தை அழுது கொண்டு இருந்தாள். அருகில் யாரும் இல்லை.

அழுது கொண்டே இருந்த குழந்தை வணிகர் கண்டு ஏன் அழுகிறாய் என கேட்டு குழந்தை பதில் கூற வில்லை

குழந்தை இல்லாத ஏக்கம்வணிகரை வாட்டியது. அன்னை மீனாட்சியே குழந்தை வடிவில் வந்து உள்ளதாக மனதில் மகிழ்ச்சியுடன்





அந்த குழந்தையை தன் வீட்டிற்க்கு அழைத்து சென்றார் போகும் போது அங்கு உள்ள குளத்தில் குளிக்க வணிகர் அந்த குழந்தையை கரையில் அமர சொல்லி விட்டு குளிக்க சென்ற பின் மீண்டும் வரும் போது அழுத குழந்தையை காண வில்லை வாடிய முகத்துடன் நடந்த விபரங்களை குடும்பத்தில் தெரிவித்தார்.

இரவு தூங்கும் போது தெய்வ அம்சத்துடன்கூடிய குழந்தை மீண்டும் தோன்றியது சிறுமியாக வந்தது நான் தான் நீ தான் என்னை தினமும் வணங்கி செல்வாய்

உனக்கு குழந்தையாக காட்சி கொடுத்தேன் அருகில் உள்ள கள்ளி காட்டில் நான் இருப்பேன் எனக்கு கோவில் கட்டி முத்து மாரியாக என்னை வழிபடவும்.

என கனவில் கூறியது காணமல் போன குழந்தை இதை வணிகர் மனைவியிடம் தெரிவித்து பொழுது விடிந்ததும் அங்கு சிலை அமைக்க முடிவுகள் செய்து குழந்தையாக அன்னை மீனாட்சியே காட்சி கொடுத்த இடத்தில் தற்போது தாய மங்கலம் முத்து மாரியம்மன் திருக்கோவில் உள்ளது.

தமிழகத்தில் அரசு போக்குவரத்து கழகத்திற்க்கு 30 ஆண்டுகளுக்கு முன்பே சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு அதிக அளவில் பக்தர்கள் தரிசனம் செய்யும் கோவிலாக தாயமங்கலம் உள்ளது.

இங்கு ஆண்டு தோறும் நடைபெறும் பங்குனி பெருந் திருவிழா நடைபெறும் பத்து நாட்களில் தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து வழிபாடு செய்வார்கள்.

பக்தர்கள் கேட்ட வரங்களை வாரி வழங்கும் வழங்கும் தாயமங்கலம் முத்து மாரியம்மன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார்.

மதுரை மீனாட்சி அம்மனே பக்தரின் குறையை போக்ககுழந்தை வடிவில் நேரில் வந்து முத்து மாரியம்மனாக காட்சி அளித்த ஸ்தலமாக தாயமங்கலம் முத்து மாரியம்மன் திருக்கோவில் உள்ளது.

மதுரையில் இருந்து தாயமங்கலம் கோவில் வரை நேரடி பஸ் வசதி உள்ளது.




# தாயமங்கலம் அம்மன் இருக்கும் திசைநோக்கி வீட்டுவாசலில் பொங்கல் வைக்கும் பக்தர்கள்




மதுரை மீனாட்சி அம்மன் தன் தீவிர பக்தர்க்கு குழந்தையாக காட்சிகொடுத்த இடம் மீனாட்சியே உருமாறி காட்சி தந்ததால் மாரியம்மன் திருப்பெயரால் கோவில் எழுப்பபட்டது.

இங்கு வரும் பக்த்தர்களால் தமிழகத்தில் அரசுபோக்குவரத்து கழகத்திற்கு அதிக வருவாய் ஏற்படுத்தி கொடுத்த கோவில் தாயமங்கலம் ஆகும்.

கடும் கோடைவெயிலின்போது இங்கு நடைபெறும் பங்குனி திருவிழா கொடியேற்றத்தின்போது இரவில் மழையும், பொங்கல் விழாவின் போது பகலில் மழையும் பெய்யும் இது ஆன்மிக அதிசயமாக பக்த்தர்கள் கருதுகின்றனர்.

மதுரை சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில்பங்குனி பொங்கல் விழாநாளில் தங்கள் வீட்டுக்கு முன்பு தாயமங்கலம் முத்துமாரியம்மன் இருக்கும் திசைநோக்கி பொங்கல் வைத்து வழிபாடு செய்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது. திருவிழா காலம் மட்டும்மின்றி ஆண்டு முழுவதும் பக்தர்கள் கோவில் வந்து நேர்த்தி கடனை செலுத்தி வருகின்றனர்.

# குழந்தையாக வந்து குறைகளை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரியம்மன்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து 18 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது தாயமங்கலம் 'கிராமம் முன்னொரு காலத்தில் இந்த ஊரை சேர்ந்த முத்து செட்டியார் என்ற வாணிபர் தினமும் மதுரை சென்று வாணிபம் செய்து விட்டு ஊர்திரும்புவார். அப்போது தினமும் மீனாட்சி அம்மனை வணங்கிவிட்டு தான் ஊர் திரும்புவார்.

குழந்தை இல்லாத அவர் மதுரை மீனாட்சியிடம் மனம் உருகி வேண்டினார். ஒரு நாள் ஊர்திரும்பும் போது வழியில் இருந்த ஊரணியில் நீர் அருத்தி காட்டுவழியில் நடத்து வந்தார். அப்போது அழகியபெண் குழந்தை அழுது கொண்டிருந்தது. குழந்தை இல்லாத நமக்கு மீனாட்சி குழந்தையாக வந்துள்ளார் என குழந்தையை தூக்கி தோளில் சுமந்து கொண்டு தாயமங்கலம் கண்மாய் வழியாக வணிகர் வந்தார். அப்போது திடீர் என குழந்தை மாயமாய் மறைந்து விட்டது. குழந்தையை பல இடங்களில் தேடினார். எங்கும் குழந்தையை கானவில்வில்லை. வீடு திரும்பிய அவர் தன் மனைவியிடம் குழந்தை கிடைத்தவிவரத்தை தெரிவித்து, பின் குழந்தை மாயமானது குறித்தும் கூறினார். அன்று இரவு முத்துசெட்டியார் வணிகரிடம் கனவில் மீண்டும் அந்த குழந்தை தோன்றி தான் கத்தாளங்காட்டில் தங்கி இருப்பதாவும் அங்கு எனக்கு கோவில் கட்ட வேண்டும், எனவும், கூறி மறைந்துவிட்டது.

அதை தொடர்ந்து அவர் அதிகாலை எழுந்து ஊர் பிரமுகர்களுடன் சென்றார். அங்கு கனவில் கூறிய இடத்தில் குழந்தை நடத்த பாதம் அடையாளம் தெரிந்தது. பின் பிடிமண் எடுத்து குடிசையில் முதலில் கோவில் அமைத்து குழத்தை உருமாறி வந்ததால்"




முத்துமாரி என அழைத்தனர். அதனை தொடந்து வறட்சியான பகுதிகள் செழித்தது. முத்துமாரிக்கு 1914ம் ஆண்டு கருங்கல்லில் திரு உருவ சிலை அமைக்கப்பட்டு கோவில் கட்டப்பட்டது. குழந்தை பாக்கியம், நோய் நொடிகள், தீராத அம்மை போன்ற நோய்களை அம் மன் குணமடைய செய்து வருகிறாள்.இன்றும் பக்தர்கள் கனவில் குழந்தையாக தோன்றி குறைகளை தீர்ப்பதால் ஏராளமான பக்தர்கள் தீசட்டி எடுத்து ஆடிவந்து தரிசனம் செய்துவருகின்றனர்.

ஆண்டுதோறும் பங்குனி மாதம் நடைபெறும் 10 நாள் திருவிழா சிறப்பு வாய்ந்தது ஆகும். நவராத்திரி, விழாவும் 10 நாட்கள் நடத்தப்படுகிறது. மதுரையில் இருந்து தாய மங்கலத்திற்கு நேரடி பஸ் வசதியுள்ளது.






# நின்ற கோலத்தில் அருள்புரியும்

# தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான் குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலைவிலும், காளை யார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலைவிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில்இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவிலும் உள்ளது தாய மங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப் பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திரு விழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திரு விழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.இத் திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங் கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இத் திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட் டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், 'தாய்மங்கலம்' என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே,







பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய்கோயில் கொண்டிருக்கிறாள், ஸ்ரீமுத்துமாரியம் மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டு வோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி, பல ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதியைச் சேர்ந்த வணிகர்கள் தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். இந்த கிராமத்தைச் சேர்ந்த முத்துச் செட்டியார், இவர் மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர். மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும் போதெல்லாம் மீனாட்சியையும்,சொக்கநாதரையும் தவறாமல் வழிபட்டு வருபவர், அப்படி ஒரு நாள் மீனாட்சியம்மனிடம், தனக்கு குழந்தை இல்லாததைஎண்ணி மனமுருகி வேண்டி மதுரையில் இருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்த



போது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரிய வில்லை என்றும் கூறி தேம்பினாள்.

"கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கின் றேன்" எனக் கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத் துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக்குழந் தையை தனக்குத் தந்ததாக எண்ணினார். ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

செல்லும் வழியில் அங்குள்ள குளத்தின் அருகில். பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு குளத்தில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போன முத்துச் செட்டியார் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறிவருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப் போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமை யிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான்உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்துஎழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார். மறுநாள் பொழுது விடிந் ததும் முதல் வேலை யாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடை வில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக் கப்பட்ட வர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற் றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும் என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த்தனை நிறைவேறி நேர்த்திக்கடன் செலுத்து பவர்களையும் இங்கு காணலாம். மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தை யை சுமந்து வருதல், கண்மலர் காணிக் கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால் காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். விழா காலங் களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்ன தானம் நடைபெறுகிறது. கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக்கின்றனர்.

கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங் கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்து கின்றனர்.

திருவிழாவை தொடர்ந்து பக்தர்கள் வசதிக் காக, மதுரை, கமுதி, காளையார்கோவில், பார்த்தி பனூர், இளையான்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து சிறப்பு பேருந்து தாயமங்க லத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.




# இராமநாதபுரத்தில் கும்பத்தில் குடிகொண்ட முத்தாலம்மன்





கோவில்களில் மூலஸ்தான மூர்த்திகள் முதலில் அமைக்கப்பட்டு,பின்னரே உற்சவ மூர்த்திகள் செய்விக்கப்படுவது வழக்கம். ஆனால் முதலில் உற்சவமூர்த்தியாக அம்பாளை எழுந்தருளச் செய்து விழா எடுத்துக் கொண்டாடிய பின்னர், மூலஸ்தான அம்பாள் திருவுருவச் சிலை செய்து அபிஷேக ஆராதனைகள் நடத்தி மகிழ்ந்துள்ளனர் இராமநாதபுரம் மக்கள்.

அக்கோவில், முத்தால பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவிலாகும். அதன் சிறப்புகளை இங்கே பார்க்கலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தில்இருந்து வெளிப்பட்டணத்தில் குடிபுகுந்த மக்கள் முதலில் தங்கள் வழிபாட்டுக்கென ஒரு விநாயகர்ஆலயம்கட்டினர்.

அந்த கணபதிக்கு 'தர்ம தாவள விநாயகர்' என்று பெயர் வைத்து வழிபட்டு வந்தனர். அக்காலத்தில் இக்கோவிலுக்குள் குருகுலம் ஒன்றும் செயல்பட்டு வந்துள்ளது. அதில் பயின்ற மாணவர்கள் ஓய்வு நேரத்தில் விளையாட்டாக கரகம் எடுத்து ஆடுவதும், வேப்பிலையை வைத்துக் கொண்டு விளையாடுவதுமாக இருந்திருக்கிறார்கள்.

ஒருநாள் இரவில் அவர்கள்கனவில் ஆதிபராசக்தி தோன்றி, "குழந்தைகளே! நீங்கள் ஆடிப்பாடி எடுத்தாடும் இந்த கரகத்தில் முத்தாலம்மன் என்ற பெயரோடு நான்எழுந்தருளியுள்ளேன். என்னை வழிபடுங்கள் உங்கள் குலத்தையும், ஊர்மக்களையும் காக்கும் தெய்வமாக இருந்து வருகிறேன்" என்று அசரீரியாக கூறினார்.



அதைத் தொடர்ந்து ஒரு சிவராத்திரி நன்னாளில் முத்தாலம்மன் குடி கொண்ட கரகத்தை எடுத்துச் சென்று தர்ம தாவள விநாயகர் கோவிலுக்கு முன்பு நிலை நிறுத்தி குலதெய்வமாக போற்றி வணங்கி வந்தனர்.

கும்பத்தின் மீதுள்ளமஞ்சனையாக அம்பாள் இருப்பதால், அம்பாளை ஓவியமாக வரைந்து அந்தப் படத்தை சிலகாலம் பூஜை செய்து வழிபட்டு வந்தனர். பின்னர் ஐம் பொன் உற்சவ விக்கிரகத்தை அமைத்து விழா எடுத்து கொண்டாடி வழிபட்டனர்.

அதன் பின்னரே முத்தாலம்மன் மூலவரை கற்சிலை வடியத்தில் உருவாக்கி பிரதிஷ்டை செய்து, மூலஸ்தான அம்பாள் பீடத்தில் ஸ்ரீ சக்கர பிரதிஷ்டையும் செய்து வழிபாடுகள் நடத்தி வந்துள்ளனர்.

இந்த அன்னையானவள் புன்னகை தவழும் மலர்ந்த முகத்துடனும், நான்கு திருக்கரங்களுடனும் சூலம், உடுக்கை, பாசம், கபாலம் ஏந்தியவளாக மாரியம்மனின் வடிவில் அமர்ந்துள்ளார்.

வேண்டுவோரின் வேண்டுதலை நிறைவேற்றும் வரப்பிரசாதியாகவும், மிகுந்த சக்தி மிக்கவளாகவும், பக்தர்களின் கண்கண்ட தெய்வமாகவும் அருள் புரிகின்றார். திருமண வரம், குழந்தை பாக்கியம் அமைந்திடவும், அம்மை நோய் உள்ளிட்ட அனைத்து பிணிகளையும் போக்கும் அருள் தெய்வமாக முத்தாலம்மன் வீற்றிருக்கிறார்.



இந்த திருக்கோவிலில்பரிவார தெய்வங்களாக வள்ளிதெய்வானை சமேத கல்யாண முருகன்,ருக்மணி சத்யபாமா சமேத கிருஷ்ணபரமாத் மா, ஆஞ்சநேயர், கருடாழ்வார்,சக்கரத் தாழ்வார், யோக நரசிம்மர், விஸ்வக்சேனர், மகாலட்சுமி, நாக லிங்கேஸ்வார், நவக்கிரகம்,ஷேத்திர பாலகரான பைரவர் எனஅனைத்து தெய்வங்களும் அருள்பாலிக்கின்றனர்.

பிரதான தெய்வமான முத்தால பரமேஸ்வரி அம்பாளுக்கு வருடாந்திர பிரம்மோற்சவமாக மாசி மகா சிவராத்திரி பெருவிழா நூற்றாண்டுகளாகவெகு விமரிசையாக சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அம்மனுக்கு உகந்த ஆடி மாதம் முளைக்கொட்டு திருவிழாவும், சித்திரை முதல் நாள் பூச்சொரிதல் திருவிழாவும். நவராத்திரி விழா, விநாயகர் சதுர்த்தி விழா, கந்த சஷ்டி விழா, கிருஷ்ண ஜெயந்தி விழா, மாதம் தோறும் பௌர்ணமி பூஜைகள், சதுர்த்தி, கார்த்திகை.

அஷ்டமி பூஜைகளும் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோவிலின் தலவிருட்சமாக வேப்பமரம் உள்ளது. மழலை வரம் வேண்டுபவர்கள் இம்மரத்தில் தொட்டில் கட்டியும், கரும்பு தொட்டில் எடுத்தும் வேண்டுதலை நிறைவேற்றுகிறார்கள். காரண ஆகம முறைப்படி இத்திருக்கோவிலில் இரண்டு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன. தினசரி காலை 6.30 மணி முதல் 11 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் இரவு 8 மணி வரையும் கோவில் நடை திறந்திருக்கும்.

அமைவிடம்:இராமநாதபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் வெளிப்பட்டணம் பகுதியில் முத்தால பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் உள்ளது.

# தீராத நோய்களை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்







தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங் குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவில் உள்ள தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் இத்திருக் கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார்.

இத்தலத்து அம்மன் குழந்தை வடிவில் தோன்றி அன்னை மீனாட்சியாகவே நின்றகோலத்தில் பக்தர்களுக்கு காட்சிதருகிறார். ஆண்டு தோறும் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெற கிறது.

இத்திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உருவாக்கி தீர்த்தகுளமாககருதபடுகிறது. இங்கு வருபவர்கள் முதலில் குளத்தில் நீராடி பின் தீசட்டி, அங்கபிரதட்சனம், பால்குடம், கரும்பு தொட்டில் எடுத்து நேர்த்தி கடன்செலுத்துவார்கள்.

ஆண்டு தோறும் பொங்கல் விழாவின்போதுமட்டும் இரண்டு நாட்கள் பக்தர்கள் 24 மணிநேரமும் தரிசனம்செய்யலாம். பிறநாட்களில் காலை7 மணி முதல் இரவும்7 மணிவரை பக்தர்கள் அனுமதிக்க படுகின்றனர். தீராத நோய்களையும் பக்தர்கள் கனவில் தோன்றி என்னை நாடிவா என அம்மன் கூப்பிட்டதாகவும் அம்மனின் அருள் பெற்ற பக்தர்கள் பலர் இன்றும் தெரிவிக்கின்றனர்.

இதற்காக ஆதாராமாக திருவிழா காலத்தில் ஆயிரக்கணக்கான பக்தர் கள் தீச்சட்டி ஏந்தி கோவிலை வலம் வருவதை இப்போதும் காணலாம்.

தீர்த்தகுளம் என்பதால் திருவிழாவின் போது குளம் தூர்வாரி சீரமைக்கப்பட்டு தண்ணீர் நிரப்பபடுவதாக கோவில் அறங்காவலர் வெங்கடேசன் செட்டியார் தெரிவித்தார். பக்தர்கள் எந்த குறையும்இன்றி மனமகிழ்ச்சியுடன் சுவாமி தரிசிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய் யப்பட்டு உள்ளது. தற்போது முத்து மாரியம்மனுக்கு தேர் செய்யும் பணிகள் நடைபெற்றுவருகிறது.

அருள்மிகு தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்



ஸ்ரீ மாரீஸ் ஸ்டோர் தயாநகர், மானாமதுரை
ஸ்ரீ மாரீஸ் ரியல் எஸ்டேட் தயாநகர், மானாமதுரை
ஸ்ரீ மாரீஸ் வெல்டிங், கொன்னக்குளம், மானாமதுரை

A.சுரேஷ்குமார் 9751612979
A.பூமிநாதன் 8122522570
A.S.கமலேஸ்வரன் 9080075007



## பழனியில் புகழ் பெற்ற மாரியம்மன் கோவில் திருவிழா

# 1008 பால்குடம் எடுத்து பக்தர்கள் வழிபாடு

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள புகழ்பெற்ற மாரியம்மன் கோவில் உள்ளது. இங்கு நடைபெறும்

பழனி மாரியம்மன் கோவில் மாசித்திருவிழா சிறப்பு வாய்ந்தது ஆகும். இங்கு உள்ள ஸ்ரீ மாரியம்மன்

பக்தர்களால் சிவ மாரியம்மன் என அழைத்து வழிபாடு செய்து வருகின்றனர். மாரியம்மன் கோவில் மாசிதிருவிழாவில் உற்சவசாந்தி விழா சிறப்பாக நடைபெறும்.

விழாவில் அன்னாபி ஷேகமும், 1008 பால்குட ஊர்வலமும் பழனியில் நடைபெற்றது.

பழனி வ.உ.சி மன்றம் சார்பில் காந்தி ரோடு பாண்டிய வேளாளர் மடத்திலிருந்து 1,008 பால்குட ஊர் வலம் நடைபெற்றது.

விழாவில் சித்தநாதன் சன்ஸ் எஸ் ஜி பழனிவேல் தலைமை வகித்து ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். அதன் பின்பு பழனி மாரியம்மனுக்கு பாலாபிஷேகம் மற்றும் பதினாறு வகையான சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

பின்பு மாலை 3 மணி அளவில் மாரியம்மனுக்கு அன்னாபிஷேகமும், அன்னத்தால் சிறப்பு சிறப்பு பூஜையுடன் சைலபுத்தரி அலங்காரம் நடைபெற்றது. இதில் சித்த நாதன் எஸ் ஜி சிவனேசன், பால்குடம் விழாகமிட்டி தலைவர் லயன் எஸ்.பி.அசோக் பங்கேற்றார். மேலும் இரவில் மாரியம்மனுக்கு உற்சவ சாந்தி பூஜை நடைபெற்றது.

இதற்கான விழாக்களில், தனசேகர், எஸ் ஜி பழனி வேல், எஸ்என் அசோக்கு மார், எஸ் என் செந்தில்கு மார், எஸ் என் விஜயகுமார், கொங்கு








வேளாளர் சங்கம் ஆர்.மாரிமுத்து, நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, நகர சித்தநாதன் சன்ஸ் எஸ் ஜி திமுக செயலாளர் வேலுமணி, ஏ கே எம் சக்திவேல், எஸ். ராஜா, முன்னாள் எம்எல்ஏ

கே எஸ் என் வேணுகோ பால், ரெண காளியம்மன் கோவில் நிர்வாகிநரேந்திரன், நிர் வாகி செல்வராஜ், தென்னிந்திய வெள்ளாளர் உற வின்முறை மதுரைபிடி ஆர் தனவேல் பிள்ளை, வெள்ளாளர் முன்னேற்ற கழகம் மாநில பொதுச் செயலாளர் பந்தல் ராஜா, பழனி சரவணபொய்கைகந்தவிலாஸ் உரிமையாளர் என். பாஸ்கரன், தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாவட்ட தலைவர் ஜே பி சரவணன்,

நகர அதிமுக செயலாளர் முருகானந்தம், அதிமுக மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணை செயலாளர் அசோக் பெருமாள், சாய்கிருஷ்ணா மருத்துவமனை சுப்புராஜ், விஜபி குமார், அரிமா சங்க மயில் சாமி, பாரதிய ஜனதா கட்சி முன்னாள் மாவட்ட தலை வர் கனகராஜ். மாவட்ட பொருளாளர் எஸ்பி ஆனந்த பெருமாள்,

பேச்சியம்மாள் ரைஸ்மில் சுப்பிரமணியன்,வ உ சி மன்றம் நிர்வாகிகள் சிவக்கொழுந்து.

சுப்பிரமணியன், எஸ் சுந் சுவாமிதர், எஸ் குமார், சுவா விலாஸ் விபூதி ஸ்டோர் அதிபர் முருகேசன், எம் எஸ்குகன், சுராங்கனிகணே சன், மகளீர் குழு தலைவி இந்திரா துர்கா கணேசன்,எ ரமேஷ், திருநாவுக்கரசு, ஓர்க்ஷாப் பாலசுப்பிரமணி, சிவகுமார், புவனேஸ்வரன், ராஜபாண்டியன், ஆவின் ரவி, வாட்டர் பாலசுப்பிரமணி, அடிவாரம் கார்த்தி, துரை செல்ல பாண்டியன், சண்முகவேல் மஹால்ரவிச் சந்திரன், யூ கார்த்திகேயன், கமலம் ஹோட்டல் சுப்பு ராஜ், முருகன் சா மில் காளிங்கராயன், நாகுஜி, பி கே என் பிச்சைமுத்து, மீனாட்சி ராஜன், எஸ்.கே. பாபு, ஜூவல்லரி தீபக், உட் பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பழனி நகரில் மத்தியில் உள்ளது பிரசித்தி பெற்ற ஸ்ரீ பழனி மாரியம்மன் கோவில்.

# புற்றாக தோன்றிய மாரியம்மன்









சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து சிவகங்கை செல்லும் வழியில் உள்ள காட்டு உடைகுளத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் பங்குனி பத்துநாட்கள் நடைபெறும்.

விழாவில் ஏராளமான பக்தர்கள் தீமிதித்து நேர்த்தி கடன் செலுத்தி வழிபடுவார்கள். இக்கோவிலில் உள்ள மரத்தில் பல ஆண்டு காலமாக அம்மன் மற்றும் விநாயகர் முகத்துடன் மாரியம்மன் காட்சிதருவதாக பக்த்தர்களால் வணங்கப்பட்டுவருகிறது. இங்கு நடைபெறும் ராகுகால பூஜைகள் கலந்து கொண்டு வேண்டிசெல்கின்றனர்.

புற்றுகோவிலை வழிபடவரும் போது முட்டைகள் வைத்து வழிபடுகின்றனர் பின்முட்டைகள் காகத்திற்கு உணவாக வழங்கப்படுகிறது. நாகர் புற்றுஅம்மனை வழிபட்டு நோய்கள் குணமாகியதாக கோவில் பரம்பரை பூசாரி சுப்பிரமணியன் கூறினார். மேலும் பயத்தால் பாதிப்படைந்தவர்களுக்கும் அம்மைநோயால் பாதிப்பு அடைந்தவர்களுக்கும் மஞ்சள் தீர்த்தம் வழங்கபடுகிறது.






அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் புற்று திருகோவிலுக்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

காட்டுஉடைகுளம்

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் புற்று திருக்கோவில்

கோவில் டிரஸ்ட்டி

S.P.சுப்பிரமணியன்

S.P. நாகராஜன் S.P. முருகன்

தயாபுரம் பஸ்ஸ்டாப் மானாமதுரை



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994323622 / 9994162182

துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.

வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.


# மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சித்திரை திருவிழா 2026

**18 ஏப்ரல், 2026** சனிக்கிழமை மாலை
வாஸ்து சாந்தி

●●●

**19 ஏப்ரல் 2026** ஞாயிற்றுக்கிழமை
காலை: சித்திரை திருவிழா கொடியேற்றம் (கொடியேற்றம்) காலை 10:30 to 11:30 மணிக்குள் கொடியேற்றம்
இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை கற்பக விருட்சம், சிம்ம வாகனம்

●●●

**20 ஏப்ரல் 2026** திங்கட்கிழமை
காலை: 7 முதல் 9.30 வரை தங்க சப்பரம்
இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை பூத வாகனம், அன்ன வாகனம்

●●●

**21 ஏப்ரல் 2026** செவ்வாய்க்கிழமை
காலை: 7 முதல் 9.30 வரை தங்க சப்பரம்
இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை கைலாச பர்வதம், காமதேனு வாகனம்

●●●

**22 ஏப்ரல் 2026** புதன்கிழமை
காலை: 9 மணி தங்க பல்லக்கு
இரவு: மாலை 6 மணி முதல் 9.30 மணி வரை தங்க பல்லக்கு

●●●

**23 ஏப்ரல் 2026** வியாழக்கிழமை
காலை: 9 மணி தங்க சப்பரம்
இரவு: 7 மணி முதல் 9.30 மணி வரை வேடர் பரி லீலை தங்க குதிரை வாகனம்

●●●

**24 ஏப்ரல் 2026** வெள்ளிக்கிழமை
காலை: 7.30 முதல் 10.30 வரை தங்க சப்பரம்
இரவு: 7.30 மணி முதல் 11.00 மணி வரை சைவ சமய ஸ்தாபித வரலாற்று லீலை ரிஷப வாகனம்
(தங்க ரிஷபம், வெள்ளி ரிஷபம்)

●●●

**25 ஏப்ரல் 2026** சனிக்கிழமை
காலை: 8 முதல் 10.30 வரை தங்க சப்பரம்
இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை நந்தீகேஸ்வரர், யாழி வாகனம்

●●●

**26 ஏப்ரல் 2026** ஞாயிற்றுக்கிழமை
காலை: 10 மணி தங்க பல்லக்கு
மாலை: அன்னை மீனாட்சி பட்டாபிஷேகம் (பட்டாபிஷேக நேரம்: மாலை 07:05 மீஷீ 07:29 மணிக்குள் பட்டாபிஷேகம்)
இரவு: 9 மணி முதல் 11 மணி வரை வெள்ளி சிம்மாசனத்தில் சுவாமி அம்பாள் வீதியுலா.

●●●

**27 ஏப்ரல் 2026** திங்கட்கிழமை
காலை: 7 முதல் 9.30 வரை மரவர்ண சப்பரம்
மாலை / இரவு: மாலை 6 மணி முதல் 11.30 மணி வரை ஸ்ரீ மீனாட்சி திக்விஜயம்
இந்திர விமான உலா

●●●

**28 ஏப்ரல் 2026** செவ்வாய்க்கிழமை
காலை: 4 மணி வெள்ளி சிம்ஹாசனம்
காலை: ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் (காலை : 8:35 மீஷீ 8:59 மணிக்குள் திருக்கல்யாணம் )
இரவு: 7.30 முதல் 11.30 வரை தங்க அம்பாரியுடன் கூடிய யானை வாகனம், புஷ்ப பல்லக்கு

●●●

**29 ஏப்ரல் 2026** புதன்கிழமை
திருதேர் (ரத உற்சவம் தேர் திருவிழா)
திருத்தேர் எழுந்தருளல் நேரம்: காலை 5:05
திருத்தேர் வடம்பிடித்தல் நேரம்: காலை 6:00 மணிக்கு
இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை சப்தாவர்ண சாப்ரம்

●●●

**30 ஏப்ரல் 2026** வியாழக்கிழமை
தீர்த்தவாரி
இரவு: 7 மணி முதல் 10 மணி வரை வெள்ளி ரிஷப வாகனம்

●●●

**மே 1** அதிகாலையில்
மதுரை கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளி காட்சி தருகிறார்.

●●●





உங்கள் பகுதி கோவில் கும்பாபிஷேகம், விழாக்கள், போன்றவற்றை

இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!

அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203






# வரம் தரும் வாள்மேல் நடந்த அம்மன் கோவில்



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி நகர் பகுதியில் அமைந்துள்ளது பிரசித்தி பெற்ற ஸ்ரீவாள்மேல் நடந்த அம்மன் திருக்கோவில். பக்தர்களால் சக்தி பீடமாக கருதபடும்

இக்கோவிலில் ஆண்டு நடைபெறும் நவராத்திரி திருவிழா சிறப்பு வாய்ந்தது ஆகும். மனமுருகி வழிபாடு செய்யும் பக்தர்கள் அனைவருக்கும் வரங்கள் தருவதாக பக்தர்களால் நம்பப்படுகிறது.

வாள்மெல் நடந்த அம்மன் நீதி தவறாமல் பக்தர்களை காப்பதாக கருதப்படுகிறது.ஆண்டு தோறும் பத்து நாட்கள் நவராத்திரி திருவிழா நடைபெறும் இதில் அம்மன் தினந்தோறும் பல்வேறு வாகனங்களில் சர்வ அலங்காரத்தில் காட்சி தருவார்.

விழாநிறைவு நாளில் விஜயதசமி தினத் தன்று வாள் மேல் நடந்த அம்மன் குதிரை வாகனத்தில் எழுந்தருளி அம்பு எய்தல் நிகழ்ச்சி நடைபெறும்.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தீமைகளை அழிக்க அம்மன் அம்பு ஏய்து வணங்கும் பக்தர்களுக்கு வரங் கள் தருவதாக ஆயிரக்கணக்கான மக்கள் வழிபாடு செய்துவருகின்றனர்.


இளையான்குடி அருள்மிகு ஞானாம்பிகை சமேத ராஜேந்திர சோழீஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் காண வருகைதரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்!!

உரிமையாளர் B.ரெத்ன காளீஸ்வரன்
Cell:94436 1225
70106 18500 / 86680 08318



ரெத்னா பட்டாசுகடை

MULTI BANK ATM/CASH MECHINE

கொரியர் சர்வீஸ்

பட்டாசு மொத்த விற்பனையாளர்

DODLA பால்பொருள் மொத்த விற்பனையாளர்

dish tv SUN DIRECT BIG TV videocon airtel digital TV TATA Sky ST COURIER The People's Choice DTDC Delivering Value

ஜெராக்ஸ், கலர் ஜெராக்ஸ், லேமினேஷன், செல்போன் சேல்ஸ் சர்வீஸ் மற்றும் அனைத்து வகையான ரீசார்ஜ் கார்டுகளும் கிடைக்கும்

9/378, காமராஜர் ரோடு, இளையான்குடி

# கேட்டவரம் தரும் எஸ். கரிசல்குளம் முத்துமாரி அம்மன் கோவில்







சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் இருந்து மதுரைராமேசுவரம் பைபாஸ் சாலையில் அன்னவாசல் விலக்கு என்ற இடத்தில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது எஸ்.கரிசல்குளம் கிராமம். இங்கு மனைவி ராக்குவுடன் வசிப்பவர் 90 வயதான லட்சுமணன் சுவாமி. இவரது இளம் வயதில் கனவில் வந்து அம்மன் அருள் கூறியதை இக்கிராம மக்கள் முக்கியமானதாக எண்ணுகின்றனர்.

சிறு வயது முதலே பராசக்தி தாய்க்கு சிறு பூஜைகளை செய்து வந்தார் லட்சுமணன் சுவாமி. பலமுறை கனவில் வந்த பராசக்தி ஊர் எல்லையில் உள்ள ஓர் இடத்தில்கல் கிடைக் கும். அதை எடுத்து வைத்து எனக்கு கோவில் கட்ட வேண்டும் என கூறி மறைந்தாள்.

அதன் பின் அருகே உள்ள வேறு ஊருக்கு சென்று குறி பார்த்தபோது கனவில் முத்துமாரியாக கல் தோன்றி உள்ளது. உடன் கனவில் கூறிய இடத்தை பார்வையிடும்படி குறி பார்த்த இடத்தில் கூறி உள்ளார்கள்.

கனவில் அம்மன் சொன்ன இடம் வேறொருவ ரின் நிலமாக இருந்தது. மிகுந்த தயக்கத்துடன் நில உரிமையாளரிடம் பேசினார். அவரும்

எந்தவித தயக்கமின்றி இடத்தை தோண்டி பார்க்க சொன்னபோது ஆச்சரியம் நடந்தது. கனவில் கூறியது போல் கருங்கல் கிடைத்தது. அதை தொடர்ந்து கனவில் கல்லாக தோன்றியது முத்துமாரி தான் என நம்பிய லட்சுமணன், அதை அங்கேயே பிரதிஷ்டை செய்து சிறு பூஜைகளை நடத்தி வந்தார். பிரதி ஷ்டை செய்த மறுநாளே பல ஆண்டு காலமாக இருந்த தழும்புகள் பூரண குணமடைந்து குணம் பெற்றார் லட்சுமணன் சுவாமி.




அன்று முதல் பல ஆண்டு காலமாக கருங்கல் லாக கிடைத்த அம்மனை முத்துமாரியாக பொதுமக்கள் வணங்கி வருகின்றனர். கனவில் அம்மன் தோன்றி குணமடைந்ததை அறிந்த ஏராளமானோர் கரிசல்குளம் கிராமம் வந்து முத்துமாரியம்மளை வழிபட தொடங் கினார்கள். அன்று முதல் லெட்சுமணன்' சுவாமி மனைவி ராக்குவுடன் கோவிலில் தங்கி அம்மனுக்கு பூஜைகளை நடத்தி வருகிறார். குழந்தை பாக் கியம், தீராப்பகை பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் அம்மன் நினைத்த காரியங்களை உடனுக்குடன் நிறைவேற்றித் தருவதாக நம்பப் படுகிறது.

2011ம் ஆண்டில் முத்துமாரியம்மனுக்கு அழ கிய சிலை வடித்து சுயம்புவாக வந்த கருங்கல் அருகேயே பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது. தற்போது கும்பாபிஷேகம் திருப்பணிகள் தொடங்கப்பட்டு வரும்

வைகாசி மாதம் மகாகும்பாபிஷேகம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது . பங்குனி பொங்கல் விழா, ஏப்ரல் 4, 5, 6-ல் நடைபெறுகிறது. ஆடிமாதம் முளைப்பாரி, தீச்சட்டி ஊர்வலம் பிரசித்தி பெற்ற திருவிழாவாக நடத்தப்படுகிறது. கருங்கல்லாக அம்மன் கரிசல்குளம் கிராமத்தில் எழுந்தருளியதால் இன்றும் ஏராளமானோர் வழிபட்டுச் செல்கின் றனர். 2025ம் ஜனவரி மாதம் லெட்சுமணன் சுவாமிகள் சமாதி நிலை அடைந்தார் அவரது ஜீவ சமாதியில் பக்தர்கள் வழிபாடு நடத்தி வருகின்றனர்.



# அற்புத வாழ்வு தரும் மாரியம்மன் திருத்தலங்கள்



மாரியம்மன் கோயிலில் நோயைத் தீர்ப்பதற்கு வேப்பிலைதான் தருவார்கள். கவலைகளை மாற்றுவதற்கு திருநீறு தான் தருவார்கள். நாம் காட்டும் கற்பூர வெளிச்சத்தின் ஒளியில் அவள் வாழ்கிறாள். நம் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு அவள் வருகிறாள். நம் கோரிக்கை நிறைவேறி விட்டால், அவளுக்கு மாவிளக்கு ஏற்றி பொங்கல் இடுகின்றோம்.

"மா" என்ற சொல்லிலேயே மாரியம்மன் இருக்கிறது. அரிசி மாவினால் ஏற்றும் உருண்டையான அந்தவிளக்கு இந்த உலகத்தின் உருவாக அவள் இருக்கிறாள் என்பதைக் காட்டுகின்றது.

மிகவும் பிரசித்தி பெற்ற, பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபடக்கூடிய மாரியம்மன் கோயில்கள், நம்முடைய தென்னகத்தில் உண்டு. ஏன் வெளிநாடுகளிலும் தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் உண்டு.

## சமயபுரம் மாரியம்மன் கோவில்

தமிழ்நாட்டிலேயே மிகவும் புகழ் பெற்ற மாரியம்மன் கோயில் சமயபுரம் மாரியம்மன் கோயில். திருச்சிக்கு அருகே சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இன்று மிக பெரிதாக இருந்திடும் கோயில் ஒரு காலத்தில் மிகவும் சிறிய கிராமத்துக் கோயிலாக இருந்தது. தமிழ்நாட்டில் பல்லாயிரம் நபர்களுக்கு குலதெய்வமாக விளங்குபவள்.

மூலவரான சமயபுரம் மாரியம்மன் புன்னகை தவழும் முகத்தோடு கட்சி தரும் அழகு காணக் கிடைக்காத அழகு. எட்டுக் கைகளுடன், தலை மாலை கழுத்தில் அணிந்து, சர்ப்பக் குடையுடன், ஐந்து அசுரர்களின் தலைகளைத் தன் காலால் மிதித்தபடி சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் கம்பீரம் அற்புதம்.

ஸ்ரீ ரங்கத்தில் இருந்து சமயபுரம் வந்த மாரியம்மன் இவள்.சோழ மன்னர் ஒருவர், தன் தங்கைக்கு சீதனமாக கண்ணனூர் என ஒரு நகரையும் கோட்டையையும் உண்டாக்கிக் கொடுத்தார். பாண்டிய மன்னர்களின் படையெடுப்பால், பிற்காலத்தில், அவை அழிந்து, மரங்கள் நிறைந்த காடாக மாறியது. பின்னால் திருத்தி கண்ணனூர் கோயில் கட்டப்பட்டதாக வரலாறு.

வைணவி என்ற மாரியம்மன்சிலை ஸ்ரீ ரங்கத்தில் இருந்தது. அதன் உக்கிரம் தாங்க முடியாமல் போனதால், அச்சிலையை அங்கிருந்து அப்புறப்படுத்த ஏற்பாடு செய்தார்கள். சிலையை அப்புறப்படுத்த வந்தவர்கள் தற்போதுள்ள "இனாம் சமயபுரம்" என்னுமிடத்தில் இளைப்பாறினார்கள். பிறகு தற்போதுள்ள மாரியம்மன் கோயில் அமைந்துள்ள கண்ணனூர் அரண்மனை மேட்டில் வைத்துவிட்டுச் சென்றனர். அப்போது,காட்டு வழியாகச் சென்ற வழிப்போக்கர்கள், அச்சிலையைப் பார்த்து அதிசயப்பட்டு அக்கம் பக்கத்தில் இருந்த கிராமமக்களைக் கூட்டி வந்து அதற்கு" கண்ணனூர் மாரியம்மன்" என்று பெயரிட்டு வழிபடத் தொடங்கினர். பின்னால், தென்னாட்டின் மீது படையெடுத்து வந்து விஜயநகரப் படைவீரர்கள், கண்ணனூரில் முகாமிட்டார்கள். கிராமமக்கள் வழிபடும் மாரியம்மனை கண்டார்கள். தங்கள் வெற்றிக்காக மாரியம்மனை வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுதல் பலித்தது. வெற்றியின் மகிழ்ச்சியில் இந்தக் கோயிலைக் கட்டினார்கள்.

விஜயரெங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் கி.பி. 1706ல் அம்மனுக்குத் தனியாகக் கோயில் அமைத்தார்கள் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட கண்ணனூர் மாரியம்மன் கோயில் இன்று, ''சமயபுரம் மாரியம்மன்" கோயிலாக மாறி புகழ்பெற்று விளங்குகிறது. ஒருமுறை இவளின் சந்நதியில் வந்து நின்று, நம் மனக்குறைகளையெல்லாம் முறையிட்டு வேண்டிக்கொண்டால் போதும், நம் துக்கங்களையெல்லாம் போக்கி அருளுவாள்.

சித்திரை மாதம் முதல் செவ்வாய் அன்று நடைபெறும் சித்திரைத் தேரும், மாசிமாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பூச்சொரிதல் விழாவும் இங்கு விசேஷம். குழந்தை இல்லாத பெண்கள் தாங்கள் கட்டிவரும் சேலையின் முந்தானையைக் கிழித்து, மரத்தில் கட்டி, ஒரு கல்லைவைத்து விடுகிறார்கள். இதனால் குழந்தைப்பேறு ஏற்படும் என்கிற நம்பிக்கை.

## நார்த்தாமலை மாரியம்மன் கோயில்

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள நார்த்தாமலைக்கு புதுக்கோட்டையில் இருந்து பேருந்துகள் உண்டு. நார்த்தாமலையில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது கீழக்குறிச்சி என்னும் கிராமம். அக்கிராமத்தில் திடீர் திடீரென்று இனம்புரியாத ஒரு நோய் தாக்கிக்கொண்டிருந்தது.

இந்த ஊரில் வாழ்ந்து வந்த குருக்கள் ஒருவர், தினமும் வயலுக்கு நடுவே உள்ள ஒத்தையடிப்பாதையில் நடந்து செல்வார். அப்படிப் போகும் போது ஏதோ ஓரிடத்தில் ஏதோ ஒரு பொருள் காலில் இடறுவதும் அந்த இடத்தில் அவர் விழுவதுமாகவே இருந்து வந்தார். எந்தப் பொருள் தன் காலைத் தடுக்கிறது என்று தேடும்பொழுது அவருக்கு ஏதோ ஒரு கல் மாதிரி இருந்தது. வயல்களில் வேலைசெய்து கொண்டிருந்தவர்களின் உதவியுடன், அந்த இடத்தைத் தோண்டினார் குருக்கள்.

கால் தடுக்கிய இடத்தில் அழகிய அம்மன் சிலை ஒன்று தென்பட்டது. அதே நேரம் ஒரு குரல் அவர் மனதின் உள்ளிருந்து பேசியது. "அருகில் உள்ள மலையடிவாரத்தில், எனக்குக் கோயில் எழுப்பி வழிபடுங்கள். சுற்றியுள்ள ஊர்மக்களை எந்த நோய் நொடியும் தாக்காமல் நான் காப்பாற்றுகிறேன்" என்றது அந்தக் குரல்.

அதன்படி நார்த்தாமலையின் அடிவாரத்தில் சின்னதாக கோயில் எழுப்பி, அம்மனின் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்துள்ளனர். இதையடுத்து அம்மை முதலான எந்த நோய்களும் இன்றி, மக்கள் ஆரோக்கியமாக வாழ்ந்ததால், அம்மனுக்கு "முத்துமாரி" என்று பெயர்.

அம்பாளுக்கு "பூவாடைக்காரி" என்ற பெயரும் உண்டு. இந்தக் கோயிலில் பங்குனி மாதத்தில் நடைபெறும் தேரோட்டம் மிகவும் சிறப்பு. நீண்டகாலமாக உடலில் பல விதமான நோய்களால் அவதிப்படுபவர்கள் இக்கோயிலில் அக்னி காவடி எடுத்து வழிபடுகின்றனர். குழந்தை இல்லாதவர்கள் கரும்பில் தொட்டில்செய்து அம்பாளை வழிபடுகிறார்கள்.

## பண்ணாரி மாரியம்மன் கோயில்

ஈரோட்டிலிருந்து 75 கிலோமீட்டர் தொலைவில் சத்தியமங்கலம் மைசூர் பாதையில் உள்ளது பண்ணாரி மாரியம்மனது கோயில்.

வண்ணார் சமுதாயத்தைச் சார்ந்தகணவனும் மனைவியும் தினசரி சலவைத்துணி துவைப்பதற்காக அவ்வூரிலுள்ள மலை அருகே ஓடும் ஆற்றின் துறைக்கு எடுத்துச்செல்வதுவழக்கம். ஒருமுறைஅந்தப் பெண் நிறை மாதக் கர்ப்பிணியாக இருந்துள்ளார்.

இருப்பினும் அதைப் பற்றி கவலைப்படாதுஅவள் கணவனோடு துணி துவைப்பதற்காக ஆற்றுக்குச் சென்றாள். திடீரென்று கடுமையான மழை பெய்தது. அந்தச் சமயத்தில் பெண்ணுக்குப் பிரசவ வலி ஏற்பட்டது. வெட்டவெளியில் தன்னுடைய மனைவிக்குப் பிரசவம் பார்க்கத் துணிந்தார். சலவைக்குக் கொண்டு வந்த சேலைகளைக் கொண்டு நால்புறமும் கட்டி தன் மனைவிக்குத் தானே பிரசவம் பார்த்துள்ளார். இரு பெண் குழந்தைகள் பிறந்தன. மகிழ்ச்சியோடு இரண்டு குழந்தைகளையும் வீட்டிற்கு எடுத்துச் செல்லத் தூக்கியபோது ஒரு குழந்தையைத்தான் தூக்க முடிந்தது. மற்றொரு குழந்தையை இருவராலும் தூக்க முடியவில்லை. ஏதோ அதிசயம் என்று அப்படியே வைத்துச் சென்றனர்.

மறுநாள் காலைபார்க்கும்போது ஒரு அழகான அம்மன் சிலையாக அக்குழந்தை காட்சியளித்தது. ஊர் மக்கள் அனைவரும் கூடி ஒரு கோயில் எழுப்பினர். ஊர் திருவிழா வந்தது. அப்போது அந்த சலவைத் தொழிலாளிப் பெண் அம்மனுக்கு படைப்பதற்காக, பச்சைமாவுக்கு வசதி இல்லாமல், புளியங்கொட்டையைக் கொண்டுஇடித்து அதில் மாவு செய்து தெற்குநோக்கிக்கொண்டு சென்றிருந்தாள். அந்த புளிமாவுக்காகஅம்மனே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி திரும்பி காட்சியளித்தது. இன் றும் அம்மன் அமைப்பு அப்படியேஉள்ளது.

## இருக்கன்குடி மாரியம்மன் கோயில்

புகழ்பெற்ற இருக்கன்குடி மாரியம்மன் கோயில் என்பது தமிழ்நாட்டில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் எனும் ஊரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் இருக்கன்குடி கிராமத்தில் உள்ளது.

பொதுவாக அம்மன் இடதுகாலை மடித்து வலதுகாலைத் தொங்கவிட்டபடி அமர்ந்திருப்பாள். ஆனால் இந்த அம்மன் வலதுகாலை மடித்து இடது காலைத் தொங்கவிட்டு இருப்பது சிறப்பு.

தொடக்கத்தில் அர்ஜுனாநதி மற்றும் வைப்பாறுநதிகளுக்கு இடையே உள்ள மேட்டுப்பகுதியில் சதுரகிரிமலைச் சித்தர் ஒருவர் அம்பாளை தரிசனம் வேண்டி தவம் இருந்தார். அம்பாள் அவருக்குக் காட்சி தந்தாள். தான் பார்த்த வடிவத்தை அவர் ஒரு சிலையாக பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். பிற்காலத்தில் இந்தச் சிலை ஆற்றுமணலில் புதைந்துபோனது. சுமார் 300 ஆண்டுகளுக்குமுன்பு சாணம் பொறுக்க வந்த இருக்கன்குடி கிராமத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி, கூடையை வைத்துச் சாணம் பொறுக்கி சேர்த்திருக்கிறாள்.


ஓரளவு சாணம் சேர்ந்த பின்பு, அந்த இடத்தில் இருந்து கூடையை எடுக்க முயன்றிருக்கிறாள். அந்தக் கூடையை எடுக்க முடியவில்லை. அப்பொழுது அவள் சாமி வந்து

ஆடியிருக்கிறாள். சாமியாடிய அந்தப் பெண், அந்தக் கூடை இருக்கும் இடத்தில், சிலையாகப் புதைந்து கிடக்கும் அம்மனைக் குறி காட்ட, அங்கே மணலை எடுத்துப் பார்த்தபோது, அம்மன் சிலை கிடைத்தது. கோயில் அமைத்து வணங்கிவந்தனர். வணங்கும் மக்களின் அனைத்து வேண்டுதல்களையும், நிறைவேற்றியதால் கோயில் பிரபலமாகியது. கரும்புத்தொட்டில் நேர்த்திக்கடன் விசேஷம்.

## வண்டியூர் மாரியம்மன் கோவில்

மதுரையின் கிழக்கே 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது வண்டியூர் மாரியம்மன் கோயில்.

ஒரு காலத்தில் இப்பகுதியில் மகிழமரங்கள் அடர்த்தியாக இருந்தன. சிலர் ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். அவர்கள் தரும் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகமாகவே, மதுரையை ஆண்ட கூன்பாண்டியன் படையோடு வந்து விரட்டியடித்தார். அப்பொழுது அங்கு இருந்த அம்மனுக்கு கோயில் கட்டினார். பிற அம்மன் கோயில்களில் இல்லாத விதமாக இங்கு அம்மன் வலக்காலை இடக்காலின்மீது மடக்கிய நிலையில் எருமை தலையுடன் உட்கார்ந்த நிலையிலும், உற்சவ அம்மனாக நின்ற நிலையிலும் உள்ளார். மூலவராக மாரியம்மன் இருப்பதால் வேறு பரிவாரத் தெய்வங்கள் கிடையாது. மூலவரான மாரியம்மனுக்கு ''பேச்சியம்மன்" என்ற திருநாமம் உண்டு.

Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை
அரசு பதிவு பெற்ற மருத்துவமனை
Estd. 1945

கிளைகள்
விருதுநகர்: பாண்டியன் நகர், பேருந்து நிறுத்தத்திற்கு எதிரே, விருதுநகர் - 626001
ராமநாதபுரம்: எண்.1/1008, அருள்நகர் 2வது தெரு, அருள் மருத்துவமனை பின்புறம் பாரதிநகர், ராமநாதபுரம் - 623503
சென்னை: எண்.16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், ஹஸ்தினாபுரம் மெயின்ரோடு, சம்ஜடி கேட் அருகில் குரோம்பேட்டை, சென்னை - 600044
HOSPITAL Regn. No. : MADUAYU2021002827O ◆ ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL
இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு
தலைமை மருத்துவமனை
130-A பாலாஜி தெரு, அழகப்பன்நகர், மதுரை-625003, போன்:0452-2692647

தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics
For Appointment +91 73731 16611 Visit our website: dhanvanthri.co.in

# பரமன்குடி கொண்ட பரமக்குடி காவல் தெய்வம் முத்தால பரமேஸ்வரி அம்மன் கோவிலின் சிறப்பு

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அமைந்துள்ள ஒரு பழங்காலக் கோவில் ஆகும். இந்தக் கோவில் நாகதோசம் உள்ளவர்களுக்கு பரிகாரத் தலமாகக் கருதப்படுகிறது.

மூலவர்: முத்தால பரமேஸ்வரி அம்மன்

உற்சவர்: முத்தாலம்மன்

தல விருட்சம்: கடம்ப மரம்

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகரின் மத்தியில் அழகிய எழில் மிகு ராஜகோபுரத்துடன் கூடியகோவிலை கொண்டிருக்கிறாள் ஸ்ரீமுத்தால பரமேஸ்வரி அம்பாள்.

பரமக்குடி ஆயிர வைசியசபை நிர்வாகத்தில் உள்ள இக் கோவில் ஆயிர வைசியர்கள் பூர்விகமாக உள்ளது.

வணிகத்தில் சிறந்து விளங்கிய ஆயிரவைசியர்கள் தீவிர அம்மன் வழிபாடு செய்பவர்கள் தென் பாண்டி நாட்டுக்கு வந்து வைகை நதியின் தென் கரையில்... பிரம்மபுரி என்று அழைக்கப்பட்ட தும், சக்திதேவி சிவலிங்கம் வைத்து வழிபட்ட தலமுமான பரமன் (இறைவன்)குடிகொண்டபரமக்குடி நகரில் குடியேறினர். சக்தியின் அம்சமாகிய ஸ்ரீமுத்தால பரமேஸ்வரி அம்பாளை ஸ்தாபித்து ஆலயம் எழுப்பி வழிபடலாயினர்.





**கோயில் அமைப்பு:** கிழக்கு நோக்கி அமைந்துள்ளது ஸ்ரீமுத்தால பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில். அழகு மிளிரும் ஐந்து நிலை ராஜ கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால், வளைவான விதானத்துடன் ஒரு மண்டபம். அதற்கடுத்து ஸ்ரீகருப்பண்ணசாமி சந்நிதி. இதன் தூண் வேலைப்பாடுகள் கலை நுட்பத்துடன் திகழ்கின்றன. இந்த சாமிக்கு விழாக் காலங்களில் பொங்கல் படைத்து வழிபடுகிறார்கள்.



கருப்பண்ணசாமியைத் தரிசித்து நகர்ந்தால் கொடி மர மண்டபம், அலங்கார மண்டபம், ஸ்ரீவிநாயகர் சந்நிதி ஆகிய வற்றைத் தரிசிக்க முடிகிறது. இந்த இடத்தில் இருந்து மேற்கே ஸ்ரீபோத்திராஜாவும், ஸ்ரீமார்த்தாண்டி அம்மனும் வடக்கு நோக்கி அருள்கிறார்கள். அம்மன் உக்கிரமாகக் காட்சி தருகிறாள். ஸ்ரீபோத்திராஜா கிராமக் காவல் தெய்வமாகப் போற்றப் படுகிறார்.

இவர்களைத் தரிசித்து கருவறை நோக்கி சென்றால், அனுக்கை விநாயகர், துவார சக்திகள், திரௌபதி ஆகியோர் காட்சி தருகிறார்கள். அம்பாள் கருவறை அர்த்தமண்டபத்துடன் திகழ்கிறது. இந்த மண்டபத்தில் ஸ்ரீமுத்தாலம்மனின் புதிய, பழைய உற்ஸவ விக்கிரகங்களும், ஸ்ரீகருப்பண்ணசாமி, ஸ்ரீபலிநாயகர் ஆகியோரின் உற்ஸவ விக்கிரகங்களும் உள்ளனர்.

கருவறையில் ஸ்ரீமுத்தால பரமேஸ்வரி, ஒரு காலை மடக்கியும் மற்றொரு காலைத் தொங்க விட்டபடியும் அமர்ந்திருக்கிறாள். அம்பாளின் திருக்கரங்களில் கத்தி, கபாலம், உடுக்கை, சூலம் ஆகியவை திகழ்கின்றன. இந்த அம்பாள் பூணூல் அணிந்திருப்பது விசேஷ அம்சம். அடியார்களுக்கு அருள்மாரி பொழியும் கருணைத் தாயாகவும், துஷ்டர் களுக்கு பயங்கரியாகவும் திகழும் அம்பாளின் திருமுக தரிசனம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

கருவறையின் மேற்குப்புறத்தில் ஆதி முத்தாலம்மன் மற்றும் நாகர்கள் சந்நிதிகள் உள்ளன. வடக்குப் பிராகாரத்தின் இறுதியில் மேற்கு நோக்கி பைரவரும், அவருக்குப் பின்புறம் ஸ்ரீஆஞ்சநேயர் தெற்கு நோக்கியும் அருள்கின்றனர்.

ஸ்ரீமுத்தாலம்மன் அடியார்களுக்கு அல்லவை நீக்கி, நல்லதை அனுக்கிரகம் செய்கிறாள் என்றால், தீய சக்திகளை துஷ்ட நிக்கிரகம் செய்து அன்பர்களைக் காத்தருளும் உக்கிர சக்தியாகத் திகழ்கிறாள் ஸ்ரீமார்த்தாண்டி அம்மன்.

**திருவிழாக்கள்:**

ஆடி மாதம் முளைக்கொட்டு திருவிழா

மாசி மாதம் பூச்சொரிதல் விழா

பங்குனி மாதம் பங்குனித் திருவிழா

நவராத்திரி

**பூச்சொரிதல் விழா:**

நகரின் அனைத்துத் தெருக்களிலும்திருக்கண்கள் அமைக்கப்படும். பூக்களை தட்டுகளில் பரப்பி வைத்து பூஜைகள் நடத்தப்படும். திருக்கண் கள் அமைக்கப்படும் இடங்களில் பட்டிமண்டபம், கரகாட்டம், கலைநிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கோயிலிலிருந்து பூச்சொரிதல் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கியச் சாலைகளின்வழியாகச் சென்று மீண்டும் கோயிலை வந்தடையும். அப்போது வாணவேடிக்கைகள் நடைபெறும். அதிகாலையில் அம்மனுக்கு பூ அலங்காரமும், மகா தீபாராதனைகளும், சிறப்பு அபிசேகமும் நடைபெறும். காலையில் பூப் பிரித்தல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, அம்மனுக்கு சார்த்தப்பட்ட பூ, பிரசாத மாக பொது மக்களுக்கு வழங்கப்படும்.

பங்குனித் திருவிழா 10 நாள்கள் நடைபெறும்.

ஒவ்வொரு நாள் இரவிலும் அன்ன வாகனம், ரிசப வாகனம், யானை வாகனம், வெள்ளி சிங்க வாகனம், குதிரை வாகனம் என அம்மன் வீதிஉலா வரும் நிகழ்ச்சி நடைபெறும்.

பால்குடம் எடுத்து வந்து நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

கோயில் மேடையில் ஒவ்வொரு நாளின் இரவு முழுவதும் கரகாட்டம், பொய்க்கால் குதிரை, மாடுமயில் ஆட்டம், போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். மத நல்லிணக்கம் எடுத்து காட்டாக பூச்சொரிதல் விழாவில் பரமக்குடியில் உள்ள

முஸ்லிம் மக்கள் பூ தட்டுகள் கொண்டு வந்து சமர்ப்பிப்பார்கள். பரமக்குடி வைகை ஆற்று கரையில் பிரசித்தி பெற்ற கோவிலாக அருள்மிகு ஸ்ரீ முத்தாலம்மன் கோவில் உள்ளது.

## திருச்செந்தூர் முருகனுக்கு வேல் கொடுத்த அம்மன்



திருச்செந்தூரில் முருகபெருமானுக்கு வேல் உகந்த அம்மனை பலர் கண்டு கொள்வது இல்லை...

வன பகுதியாக இருந்த திருச்செந்தூருக்கு ஓடி வந்து ஒளிந்து கொண்டான் அசுரன்.

எந்த வேலையும் செய்வதற்கு நமக்கு சக்தியை தருவதே சக்தி தேவிதான்.

அதனால் சூரனை வதம் செய்ய சக்தி தேவி வேலாயுதம் எனும் சக்தியை முருக பெருமானிடம் அளித்தார்.

அந்த இடம் தான் வேல் உகந்த அம்மன் திருக்கோயில்.

பராசக்தி தன் இடத்தை விட்டு புறப்பட்டு தன் பரிவாரங்களுடன் வலம் வந்து ஷண்முக விலாச மண்டபத்தில் அமர்ந்து ஆசீர்வதிக்கிறாள். அதன் பின்பே சூரன் வதம் வலம் புறப்படுகிறது.

வேல் உகந்த பராசக்தி தாயே போற்றி!

முருக பெருமானுக்கே சக்தி அளித்த அம்மன் என்பதால் வேல் உகந்த அம்மனுக்கு மரியாதை செய்த பிறகுதான் முருக பெருமானுக்கே திருச்செந்தூரில் திருவிழாக்கள் நடைபெறும்.

முருக பெருருமானுக்கு வேல் உகந்த சக்தியை காணுங்கள்.

நாமும் சக்தி பெறலாம்.

திருச்செந்தூர் முருகன் கோயில் மெயின் கேட் போகும் வழியில் Travellers Bunga-low TB ரோடின் இடது புறமாக வேல் உகந்த அம்மன் கோயில் உள்ளது.

வேலும் மயிலும் சேவலும் நமக்கு உற்ற துணை

அருள்மிகு முத்தால பரமேஸ்வரி அம்மன் பங்குனி பெருந்திருவிழாவிற்கு
வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்





நம்ம ஊரு ! நம்ம ஆர்ச் ! நம்ம ஆரஞ்ச் !
ஆரஞ்ச் சூப்பர் மார்ட் A/C
H/O: 7/331, நேதாஜி ரோடு, காந்தி சிலை ஆர்ச் அருகில், பரமக்குடி - 623707
B/O: 4/323, காந்திஜி ரோடு, கூட்டுறவு பால்பண்ணை எதிரில், பரமக்குடி - 623707
9566663133, 9994934265, 8870070127,
எங்களிடம் மளிகை, அரிசி, கவரிங், பேன்சி, பிளாஸ்டிக், சில்வர் பொருட்கள்
இவை அனைத்தும் மிகக் குறைந்த விலையில் ஆனந்தமாய் வாங்க! ஆரஞ்ச்க்கு வாங்க!!

# மாரியம்மன் வடிவத்தின் ஆதி பீடம் சமயபுரம்

ஒட்டுமொத்த உலகத்தில் உள்ள அத்தனை மாரியம்மன் கோயில்களுக்கும் தலைமை பீடமானது தான் சமயபுரம் ஆகும். சக்தி தலங்களில் மிகவும் பிரசித்தி பெற்றது இந்த தலம். தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு நோய்கள், தீவினைகள் அணுகாது, சகல சவுபாக்கியங்களும் கிடைக்க ஆண்டுதோறும் மாசி மாத கடைசி ஞாயிறு முதல், பங்குனி மாதகடைசி ஞாயிறு வரை பக்தர்களுக் காக சமயபுரம் மாரி அம்மனே 28 நாட்கள் பச்சை பட்டினி விரதம் இருக்கிறார்.

அம்மனின் இந்த விரதம் சமயபுரம் கோவிலின் தனிச்சிறப்பாகவே கொண்டாடப்படுகிறது.

இந்த 28 நாட்களில் அம்மனுக்கு தளிகை, நைவேத்தியம் கிடையாது. துள்ளு மாவும், நீர்மோர், கரும்பு, பானகம் மற்றும் இளநீர் மட்டுமே நைவேத்தி யமாக படைக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கநாதரின் தங்கை சமயபுரம் மாரியம்மன். அண்ணன் ஸ்ரீரங்க நாதரைப் போன்றே சுதையி னால் ஆன சுயம்பு வடிவமாக பக்தர் களுக்கு காட்சி அளிக்கிறாள்.

தட்சன் யாகத்துக்குச்சென்ற தாட்சாயணியை தூக்கி சிவபெரு மான் ருத்ரதாண்டவம் ஆடியபோது அம்மனின் திருக்கண் இப்பகுதியில் விழுந்ததால் இந்த திருத்தலத்திற்கு கண்ணனூர் என்ற பெயர் புராணகாலம் தொட்டே இருந்து வருகிறது.

மிகத்தொன்மையான உற்சவ அம்மனின் திரு மேனியில் இன்றும் ஆயிரம் கண்கள் உள்ளன.

இக்கோவிலில் எழுந்தருளி யுள்ள மகாமாரியம் மன் மிகப் பெரிய சுயம்பு திருவுருவமாக, விக்கிர சிம்மாசனத்தில் ஆயிரம் கோடி சூரியபிரகாசத் துடன் தங்கதிருமுடியுடன் குங்குமநிற மேனியில், நெற்றியில் வைரபட்டை ஒளிவீச, வைர கம்மல் களும், வைர மூக்குத்தியும், சூரிய, சந்திரனைபோல் ஜொலித்து, கண்களில் அருளொளிபாவித்து, அன்னைக்கு அன்னையாய், ஆதிமுதல் ஆதார சக்தியாய் அருள்பாலிக்கிறார்.

அம்மனின் சுயம்பு திருமேனியில் நவக்கிரக ஆதிக்கத்தை உள்ளடக்கி நவக்கிரகங்களை நவசர்ப்பங்களாக தரித்து அருள்பாலிப்பதால் அம்மனை தரிசனம் செய்வதன் மூலம் நவக்கிரக தோஷம் நீங்கும் என்பது ஐதீகம்.



இக்கோவிலில் இருக்கும் அம் மனை அமாவாசை, பவுர்ணமி மற்றும் கிரகண காலங்களில் வழிபட் டால்உச்ச பலன்கிடைக்கும். இத்தலத்தில் வழிபட்டால் ராகு, கேது தோஷம் நிவர்த்தியாகும் என்பதற்கு இக்கோவிலின் மேற் கூரையில் சிற்ப சான்றும் உள்ளது.

27 நட்சத்திரங்களின்ஆதிக் கங்களையும் தன் னுள் அடக்கி 27 எந்திரங்களாக திருமேனி பிரதிஷ்டையில் மகா மாரியம்மன் அருள் பாலிப்பது தனிப்பெரும் சிறப்பு அம்சமாகும். மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளின் அதிபதியாக அம்மன் ஆட்சி புரிகிறார் என்பதற்கும் சிறப்புச் சான்று கள் உள்ளன.

இக்கோவிலில் அம்மன் அஷ்ட புஜங்களுடன் வீற்றிருப்பது வேறு எந்த மாரியம்மன் கோவிலிலும் காணக்கிடைக்காத அரிய காட்சியாகும்.மேலும் மாரியம்மன் வடிவங்களில் ஆதிபீடம்சமயபுரம்ஆகும். எனவேதான் இக்கோவிலில் எழுந் தருளியுள்ள மகாமாரி பதம் மாறி சிவ பதத்தில் மிகப்பெரிய சுதை சுயம்பு திருவுருவமாக காட்சி அளிக்கிறார்.

தேவர்களை இம்சித்த மகிஷா சூரனை புரட் டாசி மாதம் ஒன்பது நாட்கள் தவமிருந்து வதம் செய்தார் அன்னை ஆதிபராசக்தி. மகிஷா சூரனை வதம் செய்த பாவம் தீரவும், தன் கோபம் தணியவும் சோழ வளநாட் டின் தலைநகர் திருச்சிக்குநேர் வடக்கே காவிரி வட கரையில் வேம்பு காட்டில் கவுமாரி என்று பெயர் பூண்டு சிவப்பு நிறம் கொண்டு மஞ்சள் ஆடை தரித்து, உடல் முழு வதும் வாசனை புஷ்பங்களால் மலை போல் குவித்து உண் ணா நோன்பிருந்து பல ஆண்டு காலம் தவம் செய்து அதன் பயனாக சாந்த சொரூபிணியாக சர் வரட்சகியாகி மாரியம் மன் என்ற பெயரில் அருள்பாலிக் கிறார்.

இந்த புராண வரலாற்றின் அடிப்படையில் தான் சமயபுரம் மாரியம்மன் கோவிலில் ஆண்டு தோறும் மாசி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் கடைசி ஞாயிறு வரை அம்பாள் பச்சை பட்டினி விரதம் இருந்து உலக ஜீவன்களை ரட்சித்து வருகிறார்.

பச்சை பட்டினி விரதத்தை அம்மன் அனுசரிக்கும் அன்றைய தினம் அதிகாலை விக்னேஷ்வர பூஜை, புண்யாக வாசனம், அனுக்ஞை, வாஸ்துசாந்தி, அங்குரார்ப்பணம் முடிந்து காலை 6.30 மணிக்கு மேல் 8 மணிக்குள் மீனலக் கனத்தில் அம்மனுக்கு காப்பு கட்டுதலுடன் பூச்சொரிதல் விழா ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும். இதில் பல ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம்.

## பெண் வடிவில் அருள்புரியும் விநாயகர்

பொதுவாக தெய்வங்களில் ஒரு உருவம் இருவேறு உருவங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் காட்சி யளிப்பது இல்லை, ஒரே உருவத்தில் சரிபாதி ஆண், பெண் என்ற வகையில் மட்டுமே அர்த்தநாரீ ஷ்வரராக காட்சியளிக்கிறார்.

ஆனால் விநாயகர் மட்டும் ஆண் விநாயகராகவும், பெண் விநாயக ராகவும் ஒரே சமயத்தில் இருவேறு உருவத்தில் அருள்புரிவது சிறப் பாகும்.

பிராஹ்மி, வைஷ்ணவிபோன்ற பெண் தெய்வங்களின் வரிசையில் வைநாயகி என்ற பெயர் இடம்பெற் றுள்ளதாக பிரகத் சம்ஹிதா என்ற நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இப்பெயர் பெண் வடிவ விநாய கரைக் குறிப்பதாகும்.

சக்திகணபதி, விக்னேஷ்வரி, கணேசினி, கஜானனா, ஜங்கினி, கணேஸ்வரி ஆகிய பெயர்களும் வைநாயகிக்கு உண்டு. பவுத்த வழிபாட்டில் “கணபதி ஹிருதயா’ என்று இவளைக் குறிப்பிடுவர்.


மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருச்செந்தூர், பவானி, திருக்குறுங்குடி, சுசீந்திரம் கோயில் தூண்களில் இச்சிற்பம் காணப்படுகிறது. புலிக் காலுடன் கூடிய வியாக்ரபாத விநாயகியைச் சிதம்பரத்தில் தரிசிக்கலாம்.

அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ


மரம் ஓடு வியாபாரம் & சாமில்

SAK சீனியப்பா குரூப்ஸ் SAK





எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அனுகவும்.



SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

சீனியப்பா லாட்ஜ் A/C

SAK திருமண ஹால்

S.ஆனந்தகிருஷ்ணன்
செல்:98424 68256



A.குணா (எ) குணசீலன்
செல்:98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,

9842868256

